**சிறப்பு சார்பு நீதிமன்றம், (மோட்டார் வாகன விபத்து இழப்பீடு தீர்ப்பாயம்)**
**திருப்பத்தூர், திருப்பத்தூர் மாவட்டம்**
**MCOP . No.36/2024**

**நாள் : 29.04.2026**

**ம.சா.**1 திரு.பாலாஜி

மனுவின்பேரில் திரும்ப அழைக்கப்பட்டு எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை:

நான் தாக்கல் செய்துள்ள நிரூபண வாக்குமூலத்தை படித்து பார்த்துதான் கையொப்பம் இட்டேன் என்றால் சரிதான். அதில் பத்தி–2ல் 02.04.2023ஆம் தேதி இரவு 8.00 மணிக்கு விபத்து நடந்ததாக கூறியுள்ளேன் என்றால் சரிதான். நான் பி எஸ் மருததுவமனையில் எக்ஸ்ரே எடுத்ததாக 04.03.2023 தேதியிட்ட ஆவணத்தை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். ம.சா.ஆ.4 ஆவணமான எக்ஸ்ரே நகலானது 30.05.2023 தேதியிட்டது என்றால் சரிதான். ம.சா.ஆ.3 ஆவணமானது விபத்திற்கு ஒரு மாதத்திற்கு முன்பு எடுக்கப்பட்ட எஸ்ரே என்றால் சரியல்ல. (தவறுதலாக தட்டச்சு செய்யப்பட்டுவிட்டதாக தெரிவிக்கப்பட்டது) என்மீது மோதிய வாகனம் எந்த வாகனம், யாருக்கு சொந்தமானது, விபத்து சமயத்தில் வாகனத்தை ஓட்டிய நபர், அவருக்குண்டான ஓட்டுநர் உரிமம் என்பதை பொருத்து எந்த ஆவணங்களையும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். 02.04.2023ஆம் தேதி விபத்து நடந்ததாக பி எஸ் வி மருத்துவமனை ரசீதுகளில் குறிப்பிடப்படவில்லை என்றால் சரியல்ல. நான் விபத்து நடந்தவுடன் அரசு மருத்துவமனையில் முதலுதவி சிகிச்சை எடுத்துக்கொண்டதற்கான விபத்து பதிவேட்டினை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான், நான் விபத்திற்கு பின்னிட்டு புதுப்பேட்டை ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு போனேன். ஆரம்ப சுகாதார நிலையத்தில் விபத்து பதிவேடு கொடுக்கவில்லை. அத்தோடு என்னை உடனடியாக பி எஸ் வி மருத்துவமனைக்கு அனுப்பிவைத்துவிட்டார்கள். பி எஸ் வி மருத்துவமனையில் சிகிச்சை எடுத்துக்கொண்டது சம்பந்தமாக ம.சா.ஆ.8 ஸ்கேன் அறிக்கையை

தவிர வேறு எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல, அனைத்து ஆவணங்களையும் தாக்கல் செய்துள்ளேன். விபத்தினால் எனக்கு எந்த காயமும் ஏற்படவில்லை என்றால் சரியல்ல. எனக்கு வலது காலில் ஏற்பட்ட எலும்பு முறிவுக்கு ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேன். நான் தாக்கல் செய்துள்ள ஆவணமானது விபத்திற்கு முன்னர் 04.03.2023ஆம் தேதியிலேயே சிகிச்சை எடுத்துக்கொண்ட ஆவணம் என்றால் சரியல்ல. நான் முதல் விசாரணையில் சொன்னதுபோல் எனக்கு எந்த காயமும் ஏற்படவில்லை என்றால் சரியல்ல. எதிர்மனுதாரரிடமிருந்து தவறான சங்கதிகளை நிரூபண வாக்குமூலத்தில் சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. வழக்கு எதிர்மனுதாரரை பொருத்து தள்ளுபடி செய்யத்தக்கது என்றால் சரியல்ல.

ஒம்/. J. நாகலட்சுமி @ விஜயராணி(FAC),
சிறப்பு சார்பு நீதிபதி (MACT),
திருப்பத்தூர்.